திரு. கே. விநயகம்: ரெக்கார்டு பண்ணுவீங்களோ, பண்ண மாட்டீங்களோ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபாநாயகர் நின்று கொண்டு பேசும்போது நீங்கள் நிற்கக்கூடாது. உட்காருங்கள்.

திரு. கே. விநயகம்: ஒவ்வொரு வாட்டியும் நீங்கள் எழுந்து நின்று விடுகிறீர்கள். நான் எப்படி உட்கார முடியும்?

It is very easy for the Chair to get up and ask me to resume my seat . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதுதான் நான் எழுந்து நிற்கிறேன். அவையிலே நீங்கள் பேசிய பேச்சுக்கள் அத்தனையும் நீக்கினால் ஒழிய * * * என்ற சொற்களை நீக்க முடியாது.

திரு. கே. விநயகம்: * * * என்ற வார்த்தை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபையில் * * * என்ற வார்த்தை பார்லிமென்டரியா? இல்லையா என்று மட்டும் நீங்கள் கேட்டிருக்கவேண்டும்.

திரு. கே. விநயகம்: அதற்கு உங்கள் ரூலிங் தான் என்ன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பார்லிமென்டரியா அன்பார்லிமென்டரியா என்பதை பேரவைத் தலைவர் முடிவு செய்வார்.

4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) பரங்கிமலையிலுள்ள அனாதை விடுதியில் தேள் விழுந்த கஞ்சியை உட்கொண்ட சிறுவர்கள் மயக்கமடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சுவாமிநாதன் அவர்கள், பரங்கி மலையில் உள்ள அனாதை விடுதி ஒன்றில் ஆகஸ்டு 28-ம் தேதி தேள் விழுந்த கஞ்சியை உட்கொண்ட 5 சிறுவர்கள் வாந்தி எடுத்து மயக்கமடைந்ததின் காரணமாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டதைப் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது பற்றி அவர் கருத்துக்களைச் சுருக்கமாக சொல்லுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, பரங்கி மலையில் உள்ள அனாதை விடுதி ஒன்றில் தேள் விழுந்த கஞ்சியை சாப்பிட்டதன் காரணமாக 5 பேர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். இம்மாதிரியான நிகழ்ச்சிகள் பல பொது இடங்களில் நடைபெறுவதும், விஷம் குடித்து பலர் சாவதும் அடிக்கடி நிகழக் கூடிய நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. அதிகாரிகள் இதிலே கவனம் செலுத்தி இருந்தால் இந்தக் கஞ்சியை அவர்கள் உண்ணாது தடுத்து இருக்க முடியும். பேப்பர்களிலே இது மாதிரி நிகழ்ச்சிகள் வெரு

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

1970 செப்டம்பர் 1] [திரு. வை சுவாமிநாதன்]

சாதாரணமாக தினசரி நடைபெறுகின்றன என்று போடப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெறுமல் இருப்பதற்காக இந்த சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்நிகழ்ச்சி பரங்கி மலை கண்டோன்மெண்டுப் பகுதியிலுள்ள பட்சாலையில் அமைந்துள்ள திரு. வெப்ஸ் நினைவு அனாதை இல்லத்தில் நடந்ததென்று சுகாதார—குடும்பக் கட்டுப்பாட்டுத் துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.

அந்த இல்லத்தில் 121 குழந்தைகள் உள்ளனர், 27—8—1970-ஆம் நாள் காலை 6 மணிக்கு அவர்களுக்குப் பால் வழங்கப்பட்டது. பிறகு அவர்களுக்கு புழுக்கிக் காயவைத்த கோதுமைக் கஞ்சி காலை எட்டு மணி அளவில் சிற்றுண்டியாக அளிக்கப்பட்டது. குழந்தைகள் எண்மருக்கு அவ்வுணவை வழங்கிய பின்னர் கஞ்சியில் இறந்த தேளொன்று இருப்பதைக் கண்டனர். உடனே கஞ்சியை மற்றக் குழந்தைகளுக்கு வழங்குவதை நிறுத்தினர். இதற்கிடையில் கஞ்சி அருந்திய குழந்தைகளுக்கு உப்பு கலந்த நீரைக் கொடுத்து வாந்தியெடுக்கச் செய்தனர். கஞ்சி குடித்தக் குழந்தைகளில் நால்வர் தலை வலிப்பதாக அறிவித்தனர். அவர்களை உள்ளூர் மருத்துவரிடம் கொண்டு சென்று சிகிச்சையளித்துப் பின்னர் அவர் சொல்லிய வண்ணம் அரசுப் பொது மருத்துவமனையில் மேற் கொண்டு சிகிச்சையளிக்கும் பொருட்டு அன்றே காலை 10 மணியளவில் சேர்த்தனர். அவர்கள் முழு அளவில் குணமடைந்து மருத்துவ மனையில் இருந்து 29—8—1970-ஆம் நாளன்று வெளியேறினர்.

சுகாதார ஆய்வாளர் அவர்கள் உணவு ஆக்கப்பட்டக் கட்டிடத்தை பார்வையிட்ட பின் கீழ்க்கண்ட குறைகள் இருப்பதாகக் கண்டறிந்தார். கூரையில் ஏராளமான சிலந்திக் கூடுகள் இருந்தன. ஒளியமைப்பு போதிய அளவில் அங்கில்லை, புகை வெளியேறத் தகுந்த புகைப்போக்கி அங்கில்லை; சமையலறையில் இருந்த சுகாதாரக் கேடான நிலைகளே இந் நிகழ்ச்சிக்குக் காரணம் என இயக்குநர் கூறியுள்ளார். மேற்சொன்னக் குறைகளை நீக்கவும், மீண்டும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடை பெறுமல் இருக்கவும் தகுந்த கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த இடத்தையும் அப்பகுதியிலுள்ள உண்டி நிலையங்களையும் சுகாதார முறையில் வைத்திருப்பதற்கு வேண்டி அவற்றை அடிக்கடிப் பார்வையிடல் வேண்டுமென அப்பகுதி சுகாதார ஆய்வாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. குழந்தைகள் நல்லபடியாக திரும்பி வந்திருக்கிருர்கள். மேலும் இது சம்பந்தமாக அரசு நடவடிக்கை எடுப்பதற்கு முடிவு செய்திருக்கிற காரணத்தால் இந்த அவையை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின்

பிற அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று கோருகிற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு அனுமதி மறுக்கிறேன்.

(ஆ) மதுரையில் சாலையோரங்களில் விளையாட்டுப் பொருள்கள், பழங்கள் முதலியவை விற்கும் ஏழைகளுக்கு அபராதம், தண்டனை விதிப்பதால் ஏற்பட்டுள்ள சீர்குலைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி கே. பி. ஜானகி அம்மாள் அவர்கள் மதுரை நகரில் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் சாலை ஓரங்களில் விளையாட்டுப் பொருள்கள், பழங்கள் போன்றவைகளை சிறு கூடைகளில் வைத்து விற்று வாழ்க்கை நடத்துபவர்களை தினசரி 5, 10 ரூ. அபராதம், தண்டனை, பொருள் விரயம் செய்து ஏழைகளின் வாழ்க்கையை சீர்குலைக்கும் நிலையைப் பற்றி விவாதிக்க ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

இது அரசாங்கத்தின் அன்றாட அலுவல்களுக்கு உட்பட்ட நிகழ்ச்சியாதலால் இந்த ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

5. வினாக்களுக்கு விரைவாக விடையளிப்பது குறித்து பேரவைத் தலைவரின் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் மேலவையிலே விரைவாக விடை வருகிறது இங்கு வரவில்லை என்று குற்றம் சொன்னார்கள். அந்த நிலைமையை விளக்கி விட விரும்புகிறேன். திரு. ஹாண்டே அவர்கள் என்ன பொருள் பற்றித் தீர்மானம் கொடுத்தார்களோ, அது பற்றி மேலவை உறுப்பினர் ஒருவரால் 2—10—1969 அன்று கேள்வி கொடுக்கப்பட்டது. அந்தக் கேள்வி மீண்டும் 8—5—1970-லே புதுப்பிக்கப்பட்டது. அந்த 23—10—1969 அன்று கொடுக்கப்பட்ட கேள்விக்கு 10—4—1970 விடை வந்து விட்டது. 18—5—1970-ல் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட கேள்விக்கு 31—7—1970-ல் விடை தரப்பட்டது. அந்த விடை மேலவையில் 27—8—1970-ல் கொடுக்கப்பட்டது.

இங்கே டாக்டர் ஹாண்டே அவர்கள் 10—8—1970-ல் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தார்கள். அது 14—8—1970-ல் இலாகாவுக்கு அனுப்பப்பட்டது: அதற்கு விடை அரசிடமிருந்து 27—8—1970 அன்று கிடைத்தது. அதை இந்த அவையில் 29—8—1970-ல் கொடுத்திருக்கிறோம். ஆகவே, இதில் எந்தவிதமான தாமதமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

6. கவன ஈர்ப்பு.

குடியாத்தம் மருத்துவ மனையிலும், கல்லப்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்திலும் மருந்தின்மையால் மக்கள் அல்லல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் விதி 41 கீழ் மாண்புமிகு கல்வி,